**திஹகொட பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 07 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஜுலை 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, திஹகொட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 192,816 தொகை பெறுமதியான ஆயுர்வேத பண்ட உதவிகளை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 311,250 தொகை பெறுமதியான உபகரணங்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் மற்றும் ஆயுர்வேத நிலையத்தின் ரூபா 205,500 பெறுமதியான 02 இராக்கைகளின் பெறுமதியினை முதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான பெற வேண்டிய ரூபா 52,137 தொகையான நிலையான வைப்புக்களின் வட்டி வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்திருந்த 10 நிர்மாண வேலைகளுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 3,955,288 தொகை மற்றும் 13 நிர்மாண வேலைகளுக்காக கடன் பட்டோர் ஏற்பாடுகள் ரூபா 6,843,030 மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(உ) நிர்மாண வேலை ஒன்றிற்காக செலுத்தியிருந்த ரூபா 398,237 இற்கான தொகை மீளாய்வாண்டிற்காக மூலதனச் செலவுகள் கடன் கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கடன் அடிப்படையில் பெற்றிருந்த சேவைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 250,412 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) ஒரு சனசமூக நிலையம், இரண்டு மயானங்கள் மற்றும் திஹகொட பஸ் தரிப்பு நிலையத்திற்கு அண்மையிலுள்ள காணி ஆகிய சொத்துக்கள் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) மதில் மற்றும் கட்டிடங்களை பிரிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 363,040 தொகை மற்றும் தகன சாலையில் பொருத்தப்பட்டிருந்த 8 மின்விசிரிகளின் பெறுமதி ரூபா 93,949 என்வற்றை மூலதனப்படுத்தி இருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்கள் காணப்படுகின்ற 04 கணக்கு விடயங்களின் ரூபா 88,496,236 தொகை தொடர்பான மீதிகள் மற்றும் துணைப் பதிவேடு / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 1,996,351 தொகையாகும்.

**1.3.3 தொங்கல் கணக்கு**

பல வருட காலமாக முன் கொண்டு வந்து காணப்படும் தொங்கல் கணக்கில் காணப்படும் ரூபா 216,311 இற்கான செலவு மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 பெற வேண்டிய கணக்குகள்**

முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு பல்வேறு கடன்பட்டோர் மீதியில் காணப்பட்ட 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 60,412,156 இற்கான பெறவேண்டிய மீதியை இனங்காணாமல் மீளாய்வாண்டின் போது கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

**1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 79,575,357 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதுள்ளது.

**1.3.6 இணக்கமின்மைகள்**

**1.3.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்தவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 199 | பண்டங்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக கொடுப்பனவு பண உறுதிப் பத்திர இலக்கம் மற்றும் திகதி குறிப்பிட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நி.பி. 1645 மற்றும் 1646 | சபைக்கு சொந்தமான 14 வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு வகை கணக்காய்வுச் சமர்பித்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2014 திசெம்பர் 30 திகதிய 2014/3(i) இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு இணக்கமின்றி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு தொலைபேசி கட்டணமாக ரூபா 17,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,260,925 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,029,839 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,088,000 | 372,456 | 377,979 | 12,545 | 2,085,700 | 399,273 | 398,140 | 18,068 |
| வாடகை | 4,027,000 | 2,940,075 | 3,115,410 | 236,504 | 62,500 | 2,908,525 | 2,775,025 | 411,839 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 776,800 | 881,912 | 866,442 | 24,930 | 619,000 | 752,780 | 756,560 | 9,460 |
| ஏனைய வருமானங்கள் | 22,310,750 | 12,861,134 | 14,320,961 | 10,078,913 | 23,199,600 | 13,937,498 | 11,219,438 | 11,538,740 |
| மொத்தம் | 28,202,550 | 17,055,577 | 18,680,792 | 10,352,892 | 25,966,800 | 17,988,076 | 15,179,163 | 11,978,107 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 28,202,550 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 17,055,577 ஆக காணப்பட்டது. ரூபா 11,978,107 தொகையாகக் காணப்பட்ட ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 29,033,684 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 18,680,792 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 10,352,892 ஆக காணப்பட்டது.

**2.2.3 வீதவரியும் வரியும்**

**ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 18,068 தொகை காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 2,465 தொகையில் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 7,988 தொகையாக காணப்படாமையால் வருட இறுதியில் ரூபா 12,545 தொகைக்கான நிலுவை ஒன்று காணப்பட்டது. ஆரம்ப மீதியில் இருந்து அறவீடுகள் 35 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**2.2.4 வாடகை**

ஆரம்ப நிலுவை ரூபா 221,839 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 893,225 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 903,560 ஆகக் காணப்படாமையினால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 211,504 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.2.5 அனுமதிப்பத்திர கட்டணம்**

ஆரம்ப நிலுவை ரூபா 9,460 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 522,915 தொகையான ஆண்டிற்கான சிட்டை இடல் உடன் ரூபா 532,375 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 507,445 ஆகக் காணப்படாமையினால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 24,930 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.2.6 ஏனைய வருமானங்கள்**

**நீர் கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆரம்ப நிலுவை மீதி ரூபா 167,666 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 294,990 தொகையான ஆண்டிற்கான சிட்டை இடல் உடன் ரூபா 462,656 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 227,637 ஆகக் காணப்படாமையினால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 235,019 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நீர் செயற்திட்டத்தின் வருமானத்தை விட ரூபா 1,619,992 இற்கான மிகையான செலவு ஒன்று ஏற்பட்டிருந்தது. மூன்று வருட காலத்தை விட மிகையான காலம் செயற்படாமல் இருந்த நீர்மானிகளுக்கு பதிலாக புதிய நீர்மானிகள் பொருத்துவதற்காக நடவடிக்கை எடுக்காமையால் நிலையான கட்டணம் அறவிடப்பட்ட நீர் நுகர்வோர் 26 பேரிடம் ரூபா 48,809 தொகை நிலுவையாக காணப்பட்டது.

### 2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 366,461 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,400,000 தொகைகள் காணப்பட்டன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்துதலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) எதிர்பாக்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை கொள்ளப்படாமை

சபையின் நீர் செயற்திட்டமொன்று நிர்மாணிப்பதற்குத் தேவையான ரூபா 499,472 தொகை பெறுமதியான கொள்வனவு செய்து 6 மாதங்களை விட மிகையான காலம் அவை களஞ்சியத்தில் செயற்படாது காணப்பட்டது. மதிப்பீட்டுத் தொகையை விட மிகையாக கொள்வனவு செய்திருந்த 34 நீர்மானிகளுக்காக ரூபா 115,430 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 166,750 தொகைக்கான தண்ணீர் பம்பு பெறுகை நடைமுறைக்கு புறம்பாக கொள்வனவு செய்திருந்தது. நீர் செயற்திட்டத்திற்கு தேவையான பண்டங்களை கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் மதிப்பீடு தயாரித்திருந்ததுடன், செயற்திட்டத்தின் மூலம் பயன் பெறுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்காமையால் செலவிடப்பட்ட பணம் பயனற்றதாக இருந்தது.

#### (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

வாராந்த சந்தைகளின் மூலம் மற்றும் தனியார் கம்பனிகளின் மூலம் அகற்றக்கூடிய திண்ம கழிவுப் பொருட்கள் சேகரித்தல் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி மேற்கொள்ளப்படுவதுடன், மீளாய்வாண்டின் போது குப்பை முகாமைத்துவத்தின் பல்வேறு செயற்பாடுகளின் மூலம் ரூபா 247,317 இற்கான தொகையொன்று உழைக்கப்பட்டிருந்து. குறிப்பிட்ட கருமங்களுக்காக இரு உத்தியோகத்தர்கள், இரு சாரதிகள் மற்றும் 2 டிரக்டர் வண்டிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. குப்பைகள் அகற்றுவதற்காக ரூபா 6,333,600 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. உக்காத குப்பைகள் சபையின் அதிகார பிரதேசத்தில் நீர் சார்ந்த பிரதேசம் ஒன்றிற்கு முறையற்ற விதமாக போடப்பட்டுள்ளது.

#### (இ) சுற்றாடல் சிக்கல்கள்

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் வெளியிடப்பட்ட 1533/16 மற்றும் 2008 ஜனவரி 25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய 35 வியாபார நிலையங்களில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளமையால் ரூபா 245,000 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. மேலும், அதன் மூலம் ஏற்படுகின்ற சுற்றாடல் சேதங்கள் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரழில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

திஹகொட பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் வீதவரி அறவீடு செய்யும் அலுவலகங்களுக்காக முன்னேற்றப்பட்ட பிரதேசம் ஒன்றாக வெளியிடப்பட்ட 2017 மார்ச் 03 திகதி இலங்கை சனநாயக சோசலிக குடியரசின் வர்த்தமானியில் வெளிப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையும் வீதவரி வலயங்கள் நிறுவப்பட்டு வீதவரி அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

2015 ஆண்டு முதல் முறையான அங்கீகாரம் ஏதும் இன்றி சபையினால் சேர்க்கப்பட்டிருந்த 06 ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகள் ஆக ரூபா 2,326,532 தொகை சபை நிதியத்தின் மூலம் செலவு செய்வதற்கு நேரிட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 03 பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட போதிலும் அதற்காக ஆட்சேர்ப்பு நடைபெற்றிருக்கவில்லை. அதேபோல் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளில் காணப்பட்ட 09 வெற்றிடங்கள் நிரப்புவதற்கும் 15 எண்ணிக்கையின் மேலதிக பதவியணியை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

களஞ்சியத்தில் இருந்து வழங்கிய ரூபா 519,891 இற்கான வீதி விளக்கு உபகரணங்கள் பொருத்தப்பட்டிருக்காததுடன், மின்னியளாளரின் சம்பளம் என ரூபா 420,091 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வீதி விளக்குகளை பராமரிப்பதிலும் காணப்பட்ட தாமதம் காரணத்தினால் 2017 ஜூன் 29 திகதி வேறு நிறுவனங்களில் இருந்து 37 மின்னியாளர்கள் ஈடுபடுத்தி 198 வீதி விளக்குகள் பராமரிப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 161,381 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்து.

**3.5 வாகனப் பயன்பாடு**

2015 மார்ச் 17 ஆம் திகதி சபைக்கு கிடைத்திருந்த ரூபா 4,500,000 தொகை பெறுமதியின் டிபர் வண்டி 2017 ஜூன் 23 திகதி விபத்திற்கு உள்ளாகியிருந்தது.

(அ) சபையின் அங்கீகாரம் இன்றி சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே ஓடிய சந்தர்ப்பத்தில் விபத்திற்கு உள்ளாகியதால் தற்போது பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியின் பிரகாரம் ரூபா 3,000,000 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) சாரதியினால் நட்டமடைந்த தரப்பினருக்கு அவரது தனிப்பட்ட பணத்தினால் நட்டஈடு செலுத்தியிருந்ததுடன், டிப்பர் வண்டியின் திருத்த வேலைக்காக எடுத்துச் செல்வதற்காக அதில் காணப்பட்ட ABC கற்கள் எடுத்துச் செல்வதற்காக சபையினால் ரூபா 130,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த நாள் முதல் திருத்த வேலை மேற்கொள்ளாமல் கராஜில் காணப்பட்டது.

(இ) 2016 செப்டம்பர் 22 திகதியின் பின்னர் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்காததுடன், விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் ஆரம்ப விசாரணை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பியிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு, உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 07 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 12,425,214 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதிகள் 13 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 06 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 17,913,551 தொகை காணப்பட்டதுடன், அப்பெறுமதி 17 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

### 4.2 உள்ளக கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 134 பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியியுடன் கலந்துரையாடி இருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.3 தீர்க்கப்படாத அவதானிப்புக்கள் மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

பின்வரும் கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(அ) 1994 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த கிதலகம(மத்திய) கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள 01 ஏக்கர் கருவா பயிர் செய்கை உடனான காணிகள் ஒரு பகுதியில் 02 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு குழாய் நீர் வசதி மற்றும் மின்சாரமும் பெற்று அங்கீகாரமின்றி நபர் ஒருவர் வசித்து வருதல் சபையினால் 02 வீடுகள் அமைந்துள்ள பகுதியை கைவிட்டு மீதிப் பகுதியை முற்கம்பிகள் அடித்து வேறாக்குவதை தவிர, சபைக்குச் சொந்தமான சொத்துக்களை முறைகேடான விதத்தில் பயன்படுத்தல் தொடர்பாக மற்றும் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) திஹகொட பிரதேச சபையின் குப்பைகள் முகாமைத்துவத்தின் போது உக்காத பொருட்களின் சுற்றாடலுக்கு ஏற்படும் சேதங்களை தடுத்தல் மற்றும் கழிவுப் பொருட்கள் சுற்றாடலுக்கு சேர்வனவு தடுதப்பதற்காக ரூபா 269,287 தொகை பெறுமதியான திண்மக் கழிவுப் பொருட்கள் தீ வைக்கும் இயந்திரம் ஒன்று 2013 மார்ச் 27 சுங்கத் தீர்வை இன்றி பெற்றிருக்காத போதிலும் அந்த இயந்திரம் அந்த நாள் முதல் செயற்படாது காணப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமானம் சேகரித்தல்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த வேலை நிருவாகம்
(உ) கணக்கீடு